உ

கணபதி துணை.

# இராயபுரம் சோமசுந்தரேசுவரர் பேரில்

# பதிற்றுப்பத்தந்தாதி.

யும் விருத்தங்கள் மூன்றும்.





திருவாதி
வே-ஸ்ரீ. கோவிந்தசுவாமி பட்டுகோசுவாமிகளது
"பிரம்மானந்த" அச்சுக்கூடத்தில்,
பதிப்பிக்கப்பட்டது.

894.8111
1357

254
2-1906

OFFICE OF THE ... REGISTERED 11 JUN 1906 MADRAS

R23:417
N06

உ

கணபதி துணை.

இராயபுரம் ஸோமஸுந்தரேசுவரர் பேரில்

# பதிற்றுப்பத்தந்தாதி.

இஃது

விருத்தாசலம் குமாரதேவர் ஆதீன பரம்பரையைச்
சேர்ந்த வேதசிரேணி என்னும் வேளச்சேரி
சுவாமிகளாகிய சிவசிதம்பர தேசிகரது
திருவடித்தொண்டர் சிவசுப்பிரமண்ய தேசிகர்
இயற்றியதை

புதுக்கோட்டை சமஸ்தானம் இராயபுரத்திலிருக்கும்
மழவைத் திவிருளையாடற் சுப்ரமணிய அய்யரவர்கள் புத்திரர்
**இராமஸ்வாமி அய்யரவர்களாற்**
பார்வையிட்டு

ஷையூரிலிருக்கும் மாற்றூர்க்கோயில் அரும்பாக்கூர் வகுப்பு
வெ. மு. மு. ரு. முத்துக்கருப்பஞ்செட்டியாரவர்கள் குமாரர்
**சொக்கலிங்க செட்டியாரால்**

திருவாதி
வேதமூர்த்தி மகா-ள-ள-ஸ்ரீ

கோவிந்தஸ்வாமி பட்கோசுவாமி களவர்களது
"பிரம்மானந்த" அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

**1906.**

MADRAS
254

உ

# இராயபுரம்
# பதிற்றுப்பத்தந்தாதி.

## காப்பு.

### வெண்பா.

சீர்மருவி ராயபுரச் சேல்விழியாள் சூடுமணத்
தார்மருவு சுந்தரன்பொற் றாளடைய—வேர்மருவ
லாகும்ப திற்றுப்பத் தந்தாதி பாடுகைக்கு
மாகுஞ் சரமுகன்றாள் வாழி.

காரானை முகமொற்றைக் கொம்பிரண்டு காதுமுக்க ணால்வாயைங் கரமுங்கொண்டு, பாராதி தனிலுள்ளோ ருய்யும்வண்ணம் பாக்கியமாம் பொருட்செல்வங் கல்விச்செல்வ, மாராத வருட்செல்வஞ் ஞானச்செல்வ மானந்தச் செல்வமிவை யருளாநிற்குஞ், சீராருஞ் செல்வவிநாயகன்மலர்த்தாள் சிந்தைசெய்வா ரெமதுகுல தெய்வமாவார்.

மன்னுமாமறை மாலயனுணர்வரு மாசறு சுயஞ்சோதி
பொன்னுலோகமும் பரவியராய மாபுரத்திலங் கயற்கண்ணி
யென்னுமாதொடு சோமசுந்தரனென விருந்தருள் பெருங்காசி
யுன்னுமாதவ ருவாக்கடல்புரைதரு மூவகையுற்றிருப்பாரே. (1)

பாரெலாம்புகழ் சாருவபூமனும் பசுந்துணர்த்தருநீழற்
சீரெலாமிகு மும்பர்கட் கிறைவனுஞ் செழியபங்கயத்தோனு
மேரெலாமிகுந் திருமகட்கேள்வனு மெய்தியவாழ்வெல்லாம்
நீரெலாமிகு மிறைபுரத்தமலனை நினைப்பவர் நினையாரே. (2)

நினையுமாறிலா நிருவிகற்பாங்கநன் னிட்டையிற் பரஞானம்
புனையுமாதவர் தமக்கயலின்றிய போதசுந்தரமூர்த்தி

தனையுமோகைசெ யங்கயற்கண்ணியென் றுமையுமறைச் சென்னி
யனையதாகிய ராயமாபுரத்திற்கண் டற்புதமடைந்தேனே. (3)

தேன்செய்மென்மொழி யுவாமதித்திருமுகஞ் சிலைநுதற் கருங்கூந்தல்
மீன்செய்மைவிழி யுமையொருபாகனை விண்ணவர் கோமானைக்
கான்செய்பொங்கர்சூ ழிராயமாபுரத்தினிற் கண்டுகண் களிகூர
யான்செய்மாதவ மென்னைகொன்முன்னைநாளிற் றெனவறியேனே.()

ஏனைவாதிகள் பிதற்றிய சமயநூலிடை மனந்தளர்வெய்தி
யானையாவகைசமரசமான தன்னியல்பினை வெளிகாட்டி
வானைமானுறு மசங்கசித்துருவென வைத்தெனையாட்கொள்ளுங்
கோனை ராயமாபுரத்தினின் மரகதக்கொடியொடும் பணிவேனே. (5)

பணியுந்தும்பையு மத்தமுங் கங்கையும் பனிதருமதிக்கீற்றும்
அணியுஞ்செஞ்சடைக் குழகனையழகனையழிஞ்சிமா வனத்தானைத்
துணியுமங்கயற்கண்ணி மணாளனைச்சோமசுந்தரன்றன்னைப்
பணியுஞ்சிந்தையற் றயற்கடவுளர்த் தொழுபவர் விதிவசமென்னே.()

என்னை வானவர் மாதவர் முனிவர்களியாவருமேமாக்கப்
பொன்னையேவளர்த் திடுதருராயமாபுரத்தி லங்கயற்கண்ணி
யன்னையோடெழுந் தருளிநம்மிறையவ னடியவர் குழாங்கட்குத்
தன்னையேதர விருந்திடுகின்றதோர் தண்ணருளதுதானே. (7)

தானெனுஞ் சிவசச்சிதானந்த மெய்த்தற் பரமதுதானே
கோனெனும்படிவந்து நன்மனுநெறி கோன்முறை திசையோச்சி
மீனெனுங்கயற்கண்ணி தன்னொடுங்கொலுவீற்றிருந் தருண்மூதூர்
நானெனும்பசுமதியிலாதவர் துதிராயமாபுரமன்றே. (8)

அன்றுநால்வருங் காலடியிருந்து நல்லறநெறியுரைத்தானை
மன்றுளேநடமாடிய செல்வனை வானவர்கோமானை
யின்று தேசிகராயமா புரத்தினிலிருந் தருள்புரிவானை
யென்று நாயினேற் கெளிவருபரமனையேத் துதிமடநெஞ்சே. (9)

நெஞ்சமே நமக்கென் குறைகாமனை நீத்தவன் கொடுங்கூற்றை
யஞ்சவே யுதைத்தருளிய பெருந்தகையலைகடலது தந்த
நஞ்சமேயமுதாக்கிய வானவர்நாயகன் குருராயன்
புஞ்சமாமருள்வாரி யாய்'ராயமாபுரத்தினிலுறும்போது. (10)

வேறு

போதானிறைந்த தருநிழற்கீழ்ப் பொன்னொலியன்ற மணித்தவிசின்
மீதாவிருந்து வுலகாளும் விண்ணோர்க்கிறைவன் முன்னாற்றுந்
தீதால்விளைந்த பெரும்பழியைத் தீர்த்தகயற்கண் மடக்கொடிதன்
னாதாராய புரமருவு நம்பாகோடி நமஸ்க்காரம். (11)

காரம்பொருந்து தவளமத கரியுமிறைஞ்சி முன்னிற்ப
வீரம்பொருந்து திருவுள்ள மிரங்கிச்சாப மறமாற்றி
வீரம்பொருந்து மிறைபுரத்தின் மீனநோக்கி யுடனமர்ந்து
பேரன்புடையர்க் கருள்புரியும் பெம்மானேயெம் பெருமானே. (12)

மானஞ்சிறந்த வழுதியர்கோ மகனார்கதம்ப வனமெறிந்து
தானஞ்சிறந்த தலம்விளக்குந் தகுதியுரைத்த பெருவணிகர்
கோனஞ்சிறந்த வன்பனெனக் கொண்டேயவன்றன் குலத்தினைக்காப்
பானஞ்சிறந்த ராயபுரம் பதியாக்கொண்டான் பரம்பரனே. (13)

பரமிதென்று மகமேதம் பண்ணுமலைபத் துவசனுளச்
சிரமமகலத் தனதொருபாற் றெள்ளாரமிர்தின் சுவைபோல
விரவும்பரையை மகவாக்கி வினைகள்கடிந்து மகராய
புரமதுறையுஞ் சிவக்கொழுந்தின் பொன்னார்கமலச் சரண்போற்றி ()

போற்றிப்படைகள் புடைசூழப் போர்க்கோலத்தி னொடுபோந்து
சாற்றுமுலக பாலர்தமைச் சயங்கொண்டெதிர்ந்த மடக்கொடியை
யாற்றுமுறையின் மணந்துமுடி யணிந்துசெங்கோன் முறைநடத்தித்
தேற்றுமிராய புரமருவு செல்வாபோற்றி யடிக்கமலம். (15)

மலங்கண்மூன் றொருங்கறுக்கும் வலியதவத்துப் புலிமுனியும்
நலங்கொள்புயங்கப் பெருமுனியு நரருங்கண்டு களிகூர
விலங்கும்வெள்ளி மணிமன்று ளின்பநடனம் புரிந்தருளி
வலங்கொளிராய புரமருவு வள்ளன்மலர்த்தாள் வணங்குதுமால்.(16)

மால்செய்கயற்கட் டிருமடந்தை மனையிலடுபோ னகமுழுதும்
பால்செய்தருந்தும் படிபூதப் படைவேந்தனுக்குப் பணித்தருளிச்
சூல்செய்வளைமொய்த் திடுபழனந் துன்னுமிராய புரமருவி
மேல்செய்கருணைச் சொக்கேசர் விழிக்குவிருந்தா யிருந்தனரே. (17)

இருந்தான்பூதப் படைவீர னிளைப்புந்தவிப்பு மெய்துதல்கண்
டருந்தாகிற்கும் படியருளா லன்னக்குழியொன் றழைத்தருளி
வருந்தாதிருத்தி ராயபுர மருவியடியர் பவப்பிணிக்கு
மருந்தாயிருந்த சிவக்கொழுந்தை வணங்காத்தலையுந் தலையாமே. (18)

தலைவாவருத்தும் பெருந்தாகந் தணித்தியென்னக் குடையாள
னிலைவாய்தெரிந்து பெருவையை நீத்தமளித்த நின்மலனைச்
சிலைவாயிராய புரமருவு தெள்ளாரமுதைக் காணுனைக்
கலைவாணருஞ்செங் கமலமலர்க் கண்ணனெனற்கென் காரணமே. ( )

காரணஞ்செய் மாமியெனுங் கனகமாலை நீராட
வாரணங்கள் புகன்றமுறை யாழியேழு மழைத்தருளிப்
பூரணஞ்செ யிராயபுரம் பொருந்திச்சனனக் கடலேழும்
மாரணஞ்செய் பெருமானை வழுத்தாவாக்கும் வாக்காமே. (20)

வேறு

காமருமாது காஞ்சனமாலை கடலாட
மாமனையிங்கு கூயருள்செய்த மாதேவன்
பூமகள்வாழுந் தேசிகராய புரவாசன்
றாமரைமென்றாள் சேர்கிலர்செய்யுந் தவமென்னே. (21)

தவமிகுமுக்ர கௌரியசெல்வன் றனையீன்ற
நவமிகுமஞ்சேல் விழியுமை பாக னனிநாளுஞ்
சிவமிகுராய புரபரமேசன் றிருமுன்னர்
பவமறவில்லார் புவியினில் வந்தென் பலன்கண்டார். (22)

பலகலைதேருங் குமரனிடத்திற் படைவேலுங்
குலவளைசெண்டுந் தந்தருளெங்கள் கோமானை
வலமிகுராய புரமதினாளும் வலஞ்செய்வா
ரலமிகுபோகம் வீடுமிரண்டு மடைவாரே. (23)

அடைதருவேலை வேலையிலேவ வருளாலே
படைமிகுமுக்ர பாண்டியனடைசொப் பனமெய்தி
விடைதருராய புரமதில்வாழும் விடையூர்தி
கடையனையின்பக் கடலிடைவைத்த கணக்கென்னே. (24)

என்வலிகாணென் றெதிர்வருதேவர்க் கிறையோனுங்
தன்வலியோடு மௌலியிழந்து தளர்வெய்த
மன்வளைவீசு மாறனிறைஞ்சு மாதேவன்
பொன்வருராய புரமதிலென்னைப் புரந்தானே. (25)

புரமுறவீசுஞ் செண்டடிகொண்டு பொன்மேரு
தரமிகுசேம நிதிகொடுமாறன் றருக்கெய்த
வரமருள்சோம சுந்தரனென்னை வாவென்று
திரமிகுராய புரமதில் போதஞ் செய்தானே. (26)

செய்தவர்வேதப் பொருளதுதேரத் திருவுள்ளஞ்
செய்தவனெயின்மூன் றெய்தவன்வேதன் சிரமொன்றைக்
கொய்தவனிறைமா புரபரமேசன் குறிகொள்ளாக்
கைதவமேவுஞ் சமயிகள்யாது கண்டாரே. (27)

கண்டனைவோருங் கண்களிகூரக் கவின்பாண்டி
மண்டலமன்னன் மைந்தனுவப்ப மணிநல்கும்

வண்டமிழோங்கு மிராயபுரத்து வணிகேசன்
றொண்டர்கள்பாதந் தொழுதுதுதிப்பார் சுரரெல்லாம். (28)

சுரபதிவாய்மை கொடுகெடவிருபன் சோதிப்பான்
வரவிடுவாரி சுவரிடமேக மடுத்துண்ண
வரவிடுராய புரமுறுநீல மணிகண்டன்
பரவிடுமென்பர் புகவறியார்கள் பவவாரி. (29)

வாரியிராயன் மதுரையின்மீது வரவிட்ட
மாரிதமுத்தங் கன்னவனுதர வலிநீக்கிச்
சீரியராய புரமுறுமெங்கள் ஜெகதீசன்
காரியல்கண்டன் றிருவடியல்லாற் கதியுண்டோ. (30)

வேறு

ஓதுபூவுலகு தேவலோகமென வும்பரிவ்வுலக மாகவே
மாதராடவர்க ளாகவாடவர்கண் மாதராகமிகு மேழைக
ளாதராகவிளை யாடுராயபுர ஞானபோதகுரு நாதனைப்
போதராகவிதம் வேண்டுமாதவர்கள் போற்றுவார்பரவி யேத்துவார். ()

வாரிசூழுலக மாளுநீண்மகுட மாறநெஞ்சுகளி கூரவே
பாரின்மீதுசிலை வேழம்வேழமிசை பான்மைகாணெனவு ணர்த்திய
நேரிலாதகுரு ராயமாநகர நேயசுந்தரவி நோதனை
வேரிலாதசிலை யானநெஞ்சுருக வேண்டுவாரவர்கள் வேண்டுவார். (32)

வேண்டுஞானநெறி தேர்கிலாதமண வேடரேவுமத வாரண
மாண்டுவீழநர சிங்கவாளிவிடு மானராயபுர வாசனு
மீண்டுமூலமல மானவாரணமி றந்தியான்கருணை சேரவே
மீண்டுஞானநர சிங்கவாளிவிடு வீரம்யாதெனவி ரிப்பதே. (33)

விரியுமால்சமய மாலுறுங்கொடிய வேடர்தீவினையை யஞ்சியே
பரியுமாதுமுன முதியநற்றருண பாலராகிவிளை யாடியே

துரியஜோதிவடி வாகியன்பர்தொழு சோமசேகரகிர் பாளுவா
யரியராயபுர மருவுமீசனடி யார்களுக்கடிமை யாவனே. (34)

ஆவலால்பரத நூனவின்றுநட மாடிநின்றுணரு மாறனும்
பாவலாளர்தொழு தேவனையுனது பாதமாறிநட மாடியென்
னேவலானதுகொ ளென்னுமாறிரை யுமீசனென்பிறவி நாசனுய்
மேவலானபதி ராயமாநகர மென்னவேதியர்கள் பன்னுவார். (35)

பன்னுமூழ்வலியி னுலிறந்தவொரு பனவமாதுபழி யஞ்சியே
யுன்னுமாரனது தேருமாறுநலு பாயமொன்றுரைத யாபர
னென்றுமீனவிழி மங்கைபங்கனை யி ராயமாபுரநி வாசனைப்
பின்னுவார்சடில நாதனைப்பரவு பேறுபெற்றவர்பி றந்திடார். (36)

ஆரியன்பரவு தாதைவேதியனை யட்டுமென்னையைய ணைந்துமே
பாரினின்றுமலை பூரியன்பெரிய பாதகந்தனையொ ழித்திடுஞ்
சீரிலங்குமருள் கண்டுவெந்துனது சேவடித்துணைய டைந்தனன்
பேரழிஞ்சிவன வாசனேயளவு பேசரும்பிறவி நாசனே. (37)

நாசகாலமது கூடலாலெகுரு நாதனுக்குரிய பன்னிமே
னேசமேவியுள னீசனைச்சமரி னெடியவாள்கொடுத டிந்திடு
மீசனேயடியர் நேசனேதிருவி ராயமாபுரநி வாசனே
பாசமோசனவி லோசனுவுனது பத்தர்பாலெனையும் வைத்திடே. (38)

வைத்தசித்தமதில் வஞ்சவெஞ்சமண மானவீனர்விட வந்திடும்
பைத்தமாசுணநி சாசரன்றனுயிர் பாணமொன்றினைம னூர்புக
வுய்த்துவெற்றிகொள மாறனுக்கருளு மும்பனேகருணை நம்பனே
மெய்த்தபோதனர்கள் சூழிராயபுர மீனலோசனிம ணாளனே. (39)

ஆளுறுதமண நீசரேவுமய லாவைநந்திம கேசநீ
மீளுறுதவகை நூறிவாகையொடு மீடியென்றருளு மீசனின்
வாளுலாவுமக ராயமாநகர வாசமானவர்கள் சேவடித்
தாளுறுதலை யேயெனக்குவிதி தோன்றவித்தனனி லத்தினே. (40)

## வேறு

நிலத்திலே வழுதியர்கோன் படைசேர்க்கக் கொடுத்தமிகு நிதியமெல்லாந், தலத்திலே திருப்பணிகள் பலவியற்றுஞ் சாமந்தன் றனக்கு வேண்டிக், குலத்திலே மிகுதருமப் பரியுகைத்து மெய்க்காட்டுக் கொடுத்ததென்னே, புலத்திலே குருராய புரத்திலே யிருந்தருளும் போதமூர்த்தி. (41)

மூர்த்திவழி பாடடியர் தொழும்பிவையிற் பேரன்பு முதிராநின்ற, சீர்த்திமிகுஞ் செழியர்பிரான் றனக்குலவாக் கிழிகொடுத்த செல்வன்றானு, மீர்த்தடியர் சங்கநிதி திருச்சரண பதுமநிதி யிரண்டுமுள்ளப், பூர்த்தியொடு மெம்மனோர்க் கருள்புரியக் குருராய புரமுற்றானே. ()

முற்றாத விளமுலையா ளுளத்திறும்பூ தடையவவர் முன்னரீண்டிப், பொற்றாது மலர்க்கரத்திற் பொன்வளையிட் டருளுமருட் புனிதனெங்கோன், கற்றார்க டவர்புரியு மழிஞ்சிமா வனத்துறையுங் கருணையாளன், மற்றாரு மறியாதென் மனத்தருளாந் தளையிட்ட வழக்குநன்றே.()

நன்றாரும் பொற்கலச முலையமுத முருகனுக்கந் நாளிலூட்டும்
பின்றாழுங் குழன்மடவா ரட்டமா சித்திபெறப் பேசும்வெள்ளி
மன்றாடு நடராயன் மகராய புரத்தினிடை வதிந்தியார்க்கு
மின்றாரும் பிரமசித்தி வழங்குகின்றா னுலகரெலா மீண்டிடீரே. (44)

ஈரமனந் தனைக்காணும் பேரன்பா லுருகுபுகார்க் கிறைவற்காகக்
காரமரு மெயில்வாயி றிறந்தடைத்து விடைபொறித்த கருணைமூர்த்தி
யேரமரு மிறைநகரத் திருந்துவினைக் கடைபூட்டி யெம்மனோரைச்
சிரமரு முத்திவழி மணிக்கதவந் திறந்துவிடுந் திறமைகாண்மின். (45)

மின்பரவு மணிமகுடச் செழியர்பிரான் படைவளவர் வேந்தன்போரிற்
பின்பரவு மிளைப்பாறப் புனற்பந்தர் வைத்தருளும் பெருந்தயாளன்
பொன்பரவு மிறைநகரத் தங்கயற்கண் மடந்தையொடும்பொருந்திநாளு
மின்பநறும் புனலருத்தி யடியர்பவக் களையாற்ற லென்னேயென்னே(

என்னையா ளியானேயென் றுணர்ந்தடியர்க் கன்னமளித் திறைஞ்
சாவிற்கும், பொன்னனையாள் பொருட்டிரத வாதவினை முடித்தருளு
ம் பூமச்சோதி, யின்னனையார் மலரழிஞ்சி வனத்திலினி தமர்ந்தடி
யே னிருப்புநெஞ்சத், தன்னனையா ரருட்குருவாற் சிவமாக வேதை
செயுஞ் சமர்த்தென்சொல்கேன். (47)

சொல்லரிய சதுரங்கப் படைகொடுவெந் தமராடுஞ் சோழவேந்தை
யெல்லரிய வதர்வீட்டித் தென்னவனைப் புரந்தருளு மிடபவூர்தி
வெல்லரிய வகங்கரத்தை யவித்தையிடைப் புகவீட்டி விம்பாபாசர்
புல்லரிய முத்திநகர் புகவிடுப்பான் மகராய புரமுற்றனே. (48)

உற்றார்க ளடியவரென் றவர்க்கடிமை பூண்டொழுகு மொருமெய்த்
தொண்ட, ரிற்றுவு நல்குரவு தீரவுல வாக்கோட்டை யீந்தபெம்மான்,
வற்றுத செல்வனிறை மகராய புரமதனில் வதிந்தென்னளுநங், கற்று
வின் மனம்போலக் கசிந்துருகு மடியர்களைக் காக்கின்றனே. (49)

ஆனதன பதியாய்வந் தவையிலெதிர் வழக்காடி யருத்தமெல்லாம்
மானமதி முகவனிதை சிறுவனுட னுவப்பவருள் வணிகர்கோமான்
மீனவிழி மடந்தையுட னிறைநகரத் தெழுந்தருளி விகற்பங்கூறு
மீனசம யிகள்வழக்குத் தீர்த்துமறைப் பொருளடியர்க் கீதல்பாரீர். ()

வேறு

பார்புகழ்மங் கலமுரச மதுரைமூதூர் பரமசுக சிவலோக மாக்குவித்
துச், சீர்புகழன் புடையவர குணதேவர்க்குத் திருவுள்ள மகிழ்சிறப்ப
ப்பருணைசெய்து, கார்புகழுங் கருங்கூந்தற் கயற்கண்ஞானக் கரும்பி
னொடு மானந்தக் காட்சிநல்கும், பேர்புகழ்மன் புரச்சோம சுந்தரேச
ப் பெருந்தகையே போற்றிஜய போற்றிபோற்றி. (51)

போற்றியரி யயனமரர் முனிவர்யாரும்பொன்னடிக்காட் படுமெடிமை
பூண்டுசிற்ப, நாற்றிசையும் பரவுமிசை யாழ்ப்பாணற்கு நானடிமை
யெனவிறகு முடியிற்றங்கி, யாற்றியநல் லமுதவிசைக் கீதம் பாடிய

டுபகையைத் துரந்தருளு மொருவின்னல்லாற், சாற்றியதன் பெருமையெண்ணு தடியர்க்காக்குந் தயவெவர்க்குண் டிறைநகரத் தமர்ந்த வாழ்வே. (52)

வாழ்வுமிகுஞ் சேரர்பிரா னென்னுமேகம் வளமைசெறி யாழ்ப்பாணக்குணக்குன்றின்பாற், சூழ்வுசெயா திருவிதியச் செம்பொன்மாரி தணவாது பொழிகவென முடங்கறீட்டி, யூழ்வலிய மிடிக்கோடை தணிப்பானல்கு முத்தமனே யிறைநகரத் துறையுங்கோவே, யேழ்வகைவெம் பவவறுமை தீரமுத்தி யின்பசுக வாழ்வெனக்கு நல்குகண்டாய்.(

கண்டதிசை புதையமுகி லினங்கள்வெள்ளிக்கார்போலு மழைபொழிநள் ளிரவுதன்னிற், றெண்டர்சிர மணியனைய திவவுகோலான் றன்னியிருந் தமுதவிசை யாழ்வாசிப்பப், பண்டரிய கனகமணிப் பீடநல்கும் பரங்கருணைத் தடங்கடலே பரவைசூழும், மண்டலமன் னகருறையு மரசேசின்றன் மலரடியி விருப்பெனுக்கும் வழங்கல்வேண்டும். (54)

வேண்டியிசைப் பணிபுரியும் பத்திரன்றன் விழியனையமடக்கொடியை வெல்வானெனண்ணி, யீண்டியவின் னுதற்கருங்கட் பவளச்செவ்வா யிசைமடந்தை தலைசாய்ப்ப வியற்றுமாங்கே, தாண்டியெனை யெதிர்ந்துவழக் காடுநெஞ்சந் தலைமடங்கப் புரிந்தெனையு மடிமையாக்கொண், டாண்டிடுதெ னின்னருளின் கடமையன்றோ வணிராய புரத்துறையு மமரரேறே. (55)

எறனைய வழுதியினுற் றந்தைதாயை யிழந்துழலும் வயவேனக் குருளைகட்குக், கூறரியவன்னையாய்த் திருமுலைப்பால் கொடுத்தருளும்பெருங்கருணைக் குன்றேகங்கை, யாறமருஞ் சடைமுடியா யகங்காரத்தாலறிவிழந்து பரிபவங்கொ ளடியனேற்கும், வேறரிய வருளமுதம் புகட்டிஞான வீடளிப்பா யிறைநகர விருப்புளானே. (56)

விருப்பமரும் வயவேனக் குருளைகட்கு மெய்யுணர்வு நல்கியமைச் சியநடாத்தச், சுருப்பமரும் பொழிற்பாண்டி நிருபன்றன்பாற் றன்னு

வித்தாங் கறிவிலியா[illegible] தொண்டனேனு, [illegible]திருப்புரு[illegible]னமுருகிப் பெரியர்தம்பா லிருந்துப[illegible] புரிந்துகரை யேறவை[illegible]பருப்பமரு முலைகயற்கண் மடந்தையொ[illegible]ணிரரீய புரத்து[illegible]ரர்கோவே.(

கோவேயெம் மிறையேயெம் மிறைபுரத்துக் கொற்றவனே கயற்கண்மடக் கொடிமணாளா, தேவேநின் செம்பொனடிக் கன்புசெய்யுஞ் சிறுகயவாய்க் குபதேசஞ் செவியிற்கூறிப், பூவேயெவ் வுயிர்களினும் வலியானாகப் புரிந்தருளுந் திருவருளின் பெருக்கைக்கண்டுஞ், சேவேறுந் திருவடிக்காட் படுதலின்றிச் சிறியனே னுய்கழிக்குந் திறமிதென்கொல். (58)

கொல்லாமற் கொடியபுலா லுணவுணமற் கோகனகக் கோகநகப் பொய்கையாடி, யல்லாரு மிரவுபகல் விரதனோற்கு மன்புருவெண் குருகரசு மின்பவீட்டிற், செல்லாநின் றறக்கருணைக் கடைக்கணோக்கஞ் செய்தருளு மிறைநகரச் செம்மலேநீ, யல்லாம லுயிர்த்துணைவே றெனக்கிங்குண்டோ வாதலினா லெனைப்புரப்பா னருள்செய்வாயே. (59)

செய்வாய்நின் கருணையினா லருளினெல்லை தெரிந்ததன்கணொருசிறியன் வாழும்வண்ணங், கைவாய்செம் மணிப்பணியான் மதுரையெல்லை கண்டுதெளிந் ததில்வாழுங் கௌரியன்போன், மெய்வாய்கண் செவிநாசி யொருங்கிகின்ற மெய்த்தவர்க ளுளம்போலு மிறைபுரத்தின், மைவாய்மென் மலர்க்கூந்தற் கயனெடுங்கண் மரகதப்பூங் கொடிபடரும் பவளக்குன்றே. (60)

வேறு

குன்றுதுமாசுந் தரநாமவாளி கொடுசோழமன்ன னிடுபோர்
வென்றுதிகன்னி வளநாடனுக்கு விறல்வாகைதந்த முறைபோ
னன்றருஞான விகல்வாளியேவி நலிபாசபந்த மழியா
நின்றுயுமென்னை யிறைமாபுரத்து விமலாபுரத்த வினிதே. (61)

இனிதாயசங்க முதுவாணர்தம்மை யெதிர்நாவலோர்கள் வலிதேர்
தனிவாணிபீட முறையோடுநல்கு தலைவாவிராய புரிவாழ்

புனிதாவெனெடு மனியாயவாது புரிவோர்க ணெஞ்சு வலிதேர்
கனிஞானபீட மருளோடுதந்து கடையேனைரக்ஷை புரிவாய், (62)

புரிநாவலோர்க ளெதிர்பாடிவென்று பொதிமாடுதந்து மறையோன்
பரிவோடுநல்ல மணமேவுவித்த பரனேயிராய புரனே
தெரியார்கள்செய்யு மிகல்வாதுவென்று சிவஞானநங்கை மணநான்
புரியாறுசெய்ய வருளாய்முடிந்த பொருளீதலென்று புகலாய். (63)

புகலாயடைந்து புகழ்பாடியன்பு புரிகீரனுய்ய வருளா
லகல்வாவிநின்று கரையேறுவித்த வரசேயிராய புரனே
நகமாதுகெண்டை விழிமாதுபங்க நவைகூரும்வெய்ய பவமாம்
மகலாரிநின்று கரையேறலின்று வருமாறெனக்கு மருளே. (64)

அருள்கொண்டுசெய்ய தமிழ்வண்மைகீர னறிவொன்றுகும்ப முனி
யாற், றெருள்கொண்டிலங்கு வகைமுன் புரிந்த செயல்போலவின்று
மெளியேன், மருள்கொண்டசிந்தை தெளிவொன்றிநாலு மறைநாலு
ணர்ந்த குருவாற், பொருள்கண்டுணர்ந்து சுகபோதமெய்தல் புரிவா
யிராய புரியாய். (65)

புரிகின்றவெய்ய கலகங்களன்று புலவோர்தவிர்ந்து விடவே
தெரிவொன்றுமூமை மகனைப்பணித்த செயல்போலிராய புரிவாழ்
வரியொன்றுகெண்டை விழிமங்கைபங்க மௌனோபதேச குருவால்
விரிநெஞ்சுகொண்டு சமயங்கள்செய்யும் வினைதீரவின்று பணியே. ( )

பணியன்பனுகு மிடைக்காட்டனோடு பகரும்வடாது மதுரை
யணிசென்றமர்ந்து செழியன்செருக்கை யகல்வித்தநின்னை யலதே
பணிலங்கடுன்று வயல்சூழிராய பதிமேவுமாதி பகவ
தணிவின்றிதெய்வ வமிழ்தன்னசெய்ய தமிழ்வண்மையாவ ரறிவார். ()

வாராழிதன்னில் வலைவீசிமீன மகரம்படுத்து நெடுமுன்
னீராளுமன்னன் மகளைப்புணர்ந்த நிருபாபுரத்து நிலமா

ரோருமங்கண் வலைவீசியிந்த ஜெகவாரிநின்று மனமீன்
வாராவென்றன்னை நின்னோடயிக்ய மணமின்றுகொள்ள மதியே. ( )

மதிசூழுமிஞ்சி நெடுவாதவூரர் மலபாககால மதுகண்
டெதிரேபெருந்து றையிலேகுருந்தி னிடைமேவிஞான மருள்கூர்
துதிமேவுபோத குருவாகியின்ப சுகபோதநல்கி யெனையா
ளதிருபராய புராதவெள்ளை யடலேறுயர்த்த சிவனே. (69)

சிவநேசரான பரிவீரரோடு திசைமேவுசம்பு வினமா
நவமார்துரங்க மவைசூழநாப்ப ணவில்வேதமாய பரிமே
லிவராநடத்தி யிகன்மாறனெஞ்ச மிசைவித்தராய புரியாய்
தவராஜகன்னி தனையெந்தவாறு தனினீமணந்த துரையாய். (70)

## வேறு

உரையாடிய பரியாவையு நிசமா நரியுருவா ய்
புரையார்வன மெய்தும்வகை புரியும்மிறை நகரோய் .
கரையார்மன முதலாகிய கரணங் நிசவடிவாய்
விரையார்மல ரடிமேவுறு விதநீசெயத் தகுமே. (71)

தருநின்னுரு வியானென்பது தரைமீ தொருவந்தி
மகனென்றவள் வினைவாயிடை மண்போடுதல் போல்வந்
திகன்மாரன்கை யடியேற்குமன் றிறைமா நகருறைவோய்
பகரும்முயி ரெவையும்மது படநின்றிடு முறையால். (72)

முறைதப்பிய செழியன்சுர முதுகூ னுடனகல
மறைசெப்பிய சிவஞானசம் பந்தமக வைப்போ
லிறைநற்பதி யுறைவோயென தியானென் னுளக்கூனே
டறையுட்பகை யாகுஞ்சுர மகல்வித்தெனை யாள்வாய். (73)

ஆள்வாரிலி மாடாயுழ லமணுள் கழுவுறவுந்
தாள்வாரிச முடிசூடிய சைவாள்வளர் வுறவுங்

கோள்வாய்ப்ர மதகோளரி யாலே புரியுமையாள்
கேள்வாவிறை நகரோயிகல் கிறிஸ்தான்கெட வருளே. (74)

அருண்மிக்குறு புகலிக்கிறை யவன்வைத் திடுகரியாந்
தெருண்மிக்குறு சிவலிங்கமுங் கிணறுஞ்சமி மரமும்
பொருண்மிக்குறு வணிகக்கொடி போல்வாள் பொருட்டழைத்து
மருண்மிக்குறு மிறைமாநகர் வாழ்வோனடி தாழ்வாம். (75)

ஆமன்றென வுளதின்றென வருவோ டுருவெனவே
தாமொன்றிய னிலைவிட்டறு சமயந்தடு மாறச்
சேமந்திக ழிறைமாபுரத் திருக்கோ விலுட்புகுந்தான்
மாமென்கயல் விழிமாதொடு மறைமேலுறை சிவனே. (76)

சிவனேஜய ஜயவானவர் தேவே ஜயவுமையா
டவனேஜய சிவசங்கர சம்போஜய வெனையாள்
பவனேஜய பரமாபசு பதியே ஜயவுயர்மா
தவனேஜய விறைமாபுரத் தலையாஜய மிகவே. (77)

மிகமேவிய வினையான்வயும் வீடும் படிபெற்றே
னகமேவிய மாயைமல மையந்திரி பற்றேன்
சுகமேயல தேதுங்குறை சொல்ல வெனக்கில்லை
மகராயபு ரத்தேயுறை வள்ள லருளாலே. (78)

ஆலந்தனை யுண்டேயமு தண்டர்க் கருள்செய்தோன்
காலன்றனை யட்டேசிறு பாலன்றனைக் காத்தோன்
ஞாலந்தரு மஞ்சேல்விழி நங்கை மணவாளன்
பாலந்திகழ் விழியானிறை பதியானெமை விதியான். (79)

விதிதந்திடு பவமுங்கொடு வெங்கூற் றுதவழிவும்
மதிவெண்குடை நிழல்வாழ்தரு மதவேடரு மயலுங்
கதிதந்தருள் புரிவானிறை கடிமா நகருறைவா
னதிசுந்தர னடிபேணுந ரடையார்பிற ரடைவார் (80)

வேறு

அடைக்கலன்பு லன்களைந்து மாணவாதி மும்மலத்
துடைக்கலன்மெ யன்புகொண்டு தொண்டுசெய்கி லேன்பவத்
திடைக்கலங்கு கண்கலக்க மெந்தவா றொழிந்துநின்
னிடைக்கலந்து சிற்பனைய விறைபுரத்து வீசனே. (81)

ஈசனெந்தை முக்கணப்ப னிறைபுரத்த னன்பருள்
வாசனிந்து கங்கைதும்பை வைத்திலங்கு சேகரன்
பாசபந்த மற்றிறைஞ்சு பத்தரொப்பில் வைப்புமை
நேசனென்று ரைப்பதன்றி வேறுரைப்ப னெஞ்சமே. (82)

நெஞ்சம்வாக் குடம்புமூன்று நின்னதென்று கொண்டடிக்
கஞ்சமென் முடித்தலத்து வைத்துநின் கடைக்கணற்
சஞ்சிதம்பொ டித்துமன்பு ரத்திலுற்ற சம்புவே
விஞ்சைதந் தெனைக்கலந்து நின்றதென்ன வித்தகம். (83)

வித்தமாவி தேகமுன்ன தென்றுனை விடுத்தியான்
றத்தமாவ ளித்தபின்பெ னக்குமோர் சுதந்திர
மித்தலத்தி லேதுமன்ப திக்கணுற்ற வீசநின்
சித்தமெங்ங னங்ஙனம்பொ ருந்துமாறு செய்கவே. (84)

செய்யராய புரமிலங்கு தேசிகேச நின்னலா
லையனன்னை மக்களொக்கல் மற்றியாரெ னக்குளார்

பொய்யதான மாயைதன்னி னின்றுலைந்த புந்திதான்
மெய்யதான நிர்விகற்ப நிட்டைமேவி நிற்குமோ. (85)

நிற்குஞான தீபம்வந்து நெஞ்சகத்த விஞ்சையா
மற்குலத்தை யீடழித்து மெய்ம்மையாய வப்பொரு
ளொற்கிலங்கு மாறுணர்த்த லென்றிராய மாநகர்ச்
சொக்கலிங்க மங்கைபங்க சோமசுந்த ரேசனே. (86)

சுந்தரேச வங்கயற்கண் மங்கைபங்க தொண்டர்சு
முந்தரேச தேவருய்ய வாலகாலம் வைத்திடுங்
கந்தரேச வேழைபங்க காலகால ருத்திர
வெந்தரேச ராயமாபு ரேசவெற்றி ரங்கிடே. (87)

இரங்குமன்ப ரெங்குளார்க ளென்றுதேடி வந்துநல்
வரங்கடந்து போதவின்ப வாழ்வுநல்கு வானெவ
னுரங்கலந்த வன்பர்நீவி ருரைமினென்னி லிந்துவைச்
சிரங்கலந்தி ராயமாபு ரத்துணின்ற செம்மலே. (88)

செம்மலாயி ராயமாபு ரத்துணின்ற தேவனே
மும்மலாதி பாசபந்த முத்திநல்கு சித்தனே
தும்மலாதி வந்தெனைத்தொ டர்ந்துநின்ற போழ்தெலா
மம்மரேகு மாறுசுந்த ரேசவென்ன வைத்திடே. (89)

வைத்தபெத்த சித்தமுற்றி ருந்துநீம றைந்தனை
கைத்தலத்தின் முத்தையொப்ப முத்தருட்க லந்தனை

யெய்த்தவத்த லத்தருட்கண் வைத்தெனைப்பு ரந்தனை
மெய்த்தமன்பு ரத்தவின்வி நோதமென்னு ரைப்பதே. (90)

வேறு

உரைக்குமாவிக மாகமங்களி னுச்சிமேவிய வும்பர்நாத னே
விரைக்குமாமலர்ச் சோலைசூழ்தரும் வென்றிமன்புரத்தன்பர்மன்னனே
குரைக்குநாயினுங் கடையனாகியகொடியபாவியென்வஞ்சநெஞ்சினைக்
கரைக்குமாறொரு சூக்ஷிதந்தெனைப் பாதுகாத்தருள் கருணைவாரியே()

வாரிவிண்வலை வானிவையக மன்னுபல்வகைச் சீவராசிகள்
சூரியன்றிசை காலமம்புலி துன்னுமைவகைப் பூதம்யாவையு
மோரினின்னயலொன்றுமின்மையி னொருவனானுனக் கனியனாவனோ
சீரிலங்கிய ராயமாபுரச் செம்மலேயெனைத் தொண்டுகொண்டிடே ()

கொண்டுநீறணிந் தைந்தெழுத்தினை யோதிநெஞ்சினிற் குற்றமின் றியே, தொண்டுசெய்துரை வாகமத்தினிற் சொன்னவண்ண நன் னெறிநடந்துமின், முண்டகம்புரை பாத மெய்தியே யுட்களித்திடு முத்தராகிய, வண்டருந்தொழு நல்வினந்தனை யானடைந்திட வன்பு தந்திடே. (93)

தந்தவோர் மொழிப் பொரு ளுணர்ந்தியான் றனியனாயுட லாதி யாய் வரும், பந்தபாசமற் றின்பமாகிய பதியினிற்குடி யாயிருந்து மே, லந்தமாதியற் றென்னுமோர்படித் தாயவீடடைந் துய்வதென்

றுகாண் கந்தமாமலர்ப் பொய்கைசூழ்தரு மிறைபுரத்துறை கடவு ளுதனே. (94)

நாதனேயருட் கண்ணனேமலர்க் கையனேதிரு நளினமாமலர்ப்
பாதனேசெழும் பவளவாயனே பாவநாசனே பங்கயச்சதுர்
வேதன்மால்பணி மன்புரத்துறை மீனலோசன மங்கைபங்கனே
யாதனேனுனைத் தஞ்சமாவடைந்தெய்துமாரருளார்கொலெய்துவார் ()

எய்துமுப்புரங் காமனைப்பொடித் தேமனின்னுயி ருண்டயன் சிரங், கொய்தவன்மகன் மகமழித்தடல் கொண்டிராவணன் றோணெரித்திடும், மைதருங்கயற் கண்ணிபங்கனை மன்னமாபுரத் தெங்கண் மன்னனைக் கைதரும்பெருங் கருணையாளனைக் கண்டுகண்குளிர்ந் தன்பர் போற்றுவார். (96)

போற்றி மாலவன் கண்ணிடந்துதன் பொன்னடிக்கணர்ச் சனைபுரிதலு, மாற்றன் மிக்குறு மாழி யீந்தொரு பாலகற்கமு தாழியீந்திடு, பேற்றுவார்கொடி யெந்தையங்கயற் கண்ணிதன்னொடு மிறைபுரத்துறை, தோற்றருஞ்சுயஞ் சோதியாயொளிர் சுந்தரேசனைச் சிந்தி நெஞ்சமே. (97)

நெஞ்சமேதிரு நீலகண்டனைப் பாண்டரங்கனை நினையுமன்பரை
யஞ்சலென்னவா ளுடையநாதனை யண்ணலைத்திரி சூலபாணியை
வஞ்சமின்றிய தேவதேவனை மன்புரத்துறு நங்கண்மன்னனைத்
தஞ்சமாக்கொடு நீபுரிந்திடு முதவியாதெனச் சாற்றவல்லனே. (98)

வல்லவாறுநின் சிர்கள்பாடவும் வாரிசத்திரு வடிவணங்கவு
மொல்லுமாறுளத் துன்னையுன்னவு மும்பரும்பெறு வின்பமெய்தவு
நல்லஞானிக ளோடுவாழவு மென்னபுண்ணிய நான்புரிந்தனன்
மல்லன்மாவள மன்புரத்துறை வள்ளலாகிய சுந்தரேசனே. (99)

ஈசனின்னருள் வாழிமன்புரத் திறைவநின்னருள் வாழியன்பருள்
வாசநின்னருள் வாழிசேல்விழி பங்கநின்னருள் வாழியெம்பவ
நாசநின்னருள் வாழிசற்குரு நாதனின்னருள் வாழிசிற்பிர
காசநின்னருள் வாழிசுந்தரக் கடவுணின்னருள் வாழிமன்னவே (100)

பதிற்றுப்பத்தந்தாதி

முற்றிற்று.

உ
கணபதி துணை.

இராயபுரம்.

சோமசுந்தரேசுவரர் பிரசன்ன மீனும்பிகை பேரில்

# ஸ்தோத்திரப்பதிக விருத்தம்.

இஃது

புதுக்கோட்டை சமஸ்தானம்

திருமெய்யம் தாலூகா ராஜமாணிக்கநல்லூருக்கு

பிரதிகிராமமான

இராயபுரத்திலிருக்கும் மழவைத் திருவிளையாட்டல்

மகா-ா-ாஸ்ரீ

சுப்பிரமணிய பாரதிகளவர்களால்

இயற்றப்பட்டது.

உ

சிவமயம்,

## இராயபுரம் சுந்தரேசுவரர்பேரிற்

# ஸ்தோத்திரப் பதிக விருத்தம்.

சீர்கொண்ட மெய்ப்பரஞ் சுடரொன்றதாய்மருவு
 சிற்சத்தியோ டிரண்டாய்ச்
செய்யமுத் தொழிலதிப ஞகிநான் மறையாய்ச்
 சிறந்தவைம் பூதமாகி
ஏர்கொண்ட வாதார மாறாகியேகூறு
 மெழுவகைத் தோற்றமாகி
யெண்டிசைப் புவியா யகண்டபரிபூர்ணமா
 யெங்குநிறைந்த பொருளே
நேர்கொண்ட மெஞ்ஞான மோனமாதவர்சிந்தை
 நேயமகலாத வறிவே
நித்யபரிசுத்த அத்துவிதபரமானந்த
 நிஷ்கள நிராதாரமே
சூர்கொண்ட வீரந் தொலைத்தசெல் வினையீன்ற
 சோதியே வுமைபாதியே
சொந்தமுள ராஜநக ரந்தனி லுகந்தசிவ
 சுந்தரேசுவர மூர்த்தியே. (1)

விரிகடலி னலைகுமிழி நுரையெனும் புவியிதை
  விரித்தொடுக்குங் கடவுளே
மெய்யாதி மாயையைப் பொய்யாகவேசெய்து
  வீடுதரு பேரின்பமே
அரியதா யெளியதா யணுவதாய் மலையதா
  யருவமாகின்ற வுருவே
ஆதாரமேயெங்கு மானவொன்றேயிரண்
  டற்றவிடமே போதமே
கரியதாய்க் காரணங் காரியமதாகியெக்
  காலமுமிருக்கு மெய்யே
கனியுமன் பர்க்கினிய கனியேதெள் ளமுதமே
  கண்டேசுவைக் கரும்பே
சுருதிமுடி யதனிலன வரதமொளி பெருகிவளர்
  சோதிமாணிக்க மணியே
சொந்தமுள ராஜநக ரந்தனி லுகந்தசிவ
  சுந்தரேசுவர மூர்த்தியே. (2)

மித்தையுல கத்தினை யகற்றியுரை யத்துவித
  மெய்த்தவர்கருத்தி னினைவே
வேதமுடிவேசகவி ஞேதவடிவேகமல
  வேதனெடு மாலுமறியா
நித்திய நிரஞ்சன நிராமய நிராலம்ப
  நின்மல நிர்ம்மோக முதலே
நீரனல் மருத்துமண் விண்டிக்குமுதலாய
  நிலையெனவிளங்கு வித்தே

சத்துவ ரஜோதம குணத்துவ மொழிந்தபர
சச்சிதானந்த வொளியே
தண்மலரின் வாசமென வேயாதிசத்தியொடு
சார்ந்துசாராத வறிவே
சுத்தமே யடியவர்கள் சித்தமேபெருகுதே
ஜோமயவிலாச வெளியே
சொந்தமுள ராஜநக ரந்தனி லுகந்தசிவ
சுந்தரேசுவர மூர்த்தியே. (3)

தரணிதேராகமதி யிரவியே சகடதாய்த்
தந்திரங்கள்மே லணியதாய்ச்
சகலமந்திரங்களு மச்சாணியாகவே
சதுமறைகள் புரவியாகப்
பிரமனேசாரதிய தாய்த்தேர்நடத்தப்
பெருங்கனக கிரிவில்லதாய்ப்
பேரான சேடனே நாணியாய்மாலே
பிடித்தவம்பாய்த் தரித்துப்
புரமூன்றினுக்கிவள வேனென நகைத்துவெண்
பொடியாக்கிநின்ற நிமலா
பூதகோடிகளாற் கடைக்காலமண்டம்
பொடித்தணியு மேகமூர்த்தி
சுரர்முனிவர் கதிர்மதிக டொழுதிசைகள் பரவவளர்
சோதியேசகந் நாயகா
சொந்தமுள ராஜநக ரந்தனி லுகந்தசிவ
சுந்தரேசுவர மூர்த்தியே. (4)

பண்டனைய சன்மமுன தினியதுதியன்றியே
பாழாத்தொலைந்து தேதோ
பண்ணுசிறு புண்ணிய பலத்தினுலிவ்வுடல்
படைத்தேயுனைத் துதித்தேன்
றெண்டனிடு மடியவரொ டுறவாகினேன்கவலை
தீர்ந்தேன்மனந் தெளிந்தேன்
றீயமாயப்ரபஞ் சக்காட்டை ஞானவெண்
டீயாலெரித் தொழித்துக்
கண்டகப் பிறவிவினை யண்டாதுசெய்வதுன்
கடனையாகருணை மூர்த்தி
கர்த்தனே யத்தனே முத்தனே சுத்தனே
காரணுபரி பூரணு
துண்டவெண் பிறைநுதற் பிடிநடைத் துடியிடைத்
தோகைமீனுட்சி பாகா
சொந்தமுள ராஜநக ரந்தனி லுகந்தசிவ
சுந்தரேசுவர மூர்த்தியே. (5)

அகிலமகிழ் தென்னு டதின்மதுரை நகரின்முன்
னறுபத்துநான்கு லீலை
யருள்செய்த தெனவின்று மெவர்களுங் காணவே
யறுபத்தி யைந்தாவதாய்ப்
பகரவுன் விளையாடல் பாடிமெடியேனுனது
பதசேவைசெய்து தினமும்
பணிசெய்து விகபரம் மகிழ்வுபெற வருளியே
பண்டுவெடவால வாயிற்

சகலவடி யாருட னுகந்ததென மதுரையது
　தனைவிட்டெழுந் தருளியே
தந்திமுகன் முதலான பாலரடியார்நந்தி
　சாருகணநாதர் சூழச்
சுகமருவு மீனாட்சி யுடன்வந்து தோன்றியென்
　றுணைவிழிகள் கண்டுகுளிரச்
சொந்தமுள ராஜநக ரந்தனி லுகந்தசிவ
　சுந்தரேசுவர மூர்த்தியே. (6)

முன்பிறப்பினிலுனது தாடொழுதிலேன்பிறவி
　மூன்றதனி லிப்பிறப்பின்
மொழியுமுன தடிதொழுது கருணைப்பெருங்கடலின்
　மூழ்கியேமுத்தி பெற்றேன்
பின்பிறப்பேதுனது தாடொழப் பெற்றிலேன்
　பிழையிரண் டிதுபொறுப்பாய்
பிறைசூடி யானந்த கீர்த்தமிழ மத்தனே
　பேரின்பமோன வாழ்வே
அன்பருக் கின்பமிகு மமுதமழை யதுசொரி
　நிரஞ்சனப்பெருமை முகிலே
அஞ்ஞானவந்தகா ரப்படலமொழியவந்
　தருட்சதோதய சூர்யனே
துன்பமு மின்பமுந் துக்கமுஞ் சுகமுமோர்
　துணையுமில்லாத துணையே
சொந்தமுள ராஜநக ரந்தனி லுகந்தசிவ
　சுந்தரேசுவர மூர்த்தியே. (7)

அன்னாட் கடம்பவன மோர்வணிகனுன்மதுரை
யாக்கியாரும் பணியவே
அறுபத்துநான்குவிளை யாடல்செய்தனைநீச
ரரசாள்வதுனது விளையாட்
டின்னுளி லென்றுய்ந்து முனதருட் கோட்டையை
யெடுத்துமுன் பணிபோற்செய
வெண்ணுமன் பின்மையா னிம்மதுரை யொருநகர
மெனநீங்கியேழு நகரம்
பன்னாரு மகிழ்வுறு மழிஞ்சிவன மிதுதனைப்
புதியாக்கியனைய வணிகர்
பட்சமுத் தய்யனின் னருளாற் றிருப்பணிகள்
பலசெய்து பிரார்த்திக்கவே
சொன்னுவலர்புகழ வேதரிசனந்தந்து
தோன்றிரட்சித்த பரனே
சொந்தமுள ராஜநக ரந்தனி லுகந்தசிவ
சுந்தரேசுவர மூர்த்தியே. (11)

சோமசுந்தரேசுவரர் பேரில்

## ஸ்தோத்திரப் பதிக விருத்தம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

## பிரசன்ன மீனும்பிகை பேரில்

# ஸ்தோத்திரப் பதிக விருத்தம்.

மங்களவுலக மெங்கினுந்தானு
மலிந்தபல் லுயிர்க்குயிரான
வண்ணமே யன்பரெண்ணமேநிறைந்த
வானமே ஞானமேமோனத்
துங்கமாமுனிவர் தங்கண்மாதவமே
சோதியே யாதியேநீதி
துலங்குமெய்ப்பொருளே யிலங்கியவருளே
சுத்தமே சித்தமேயான
பங்கயத்திருவே பற்பலவுருவே
பகரரு மொருதனிமுதலே
படர்மறைமுடிவே சுடரொளிவடிவே
பரிந்தருள் புரிந்தெனையாள்வாய்
திங்களார்வேணிச் சுந்தரேசுவரரைச்
சேர்ந்தெழில் சார்ந்ததெள்ளமுதே
ஸ்திரந்தரும்ராய புரந்தனில்வாழுந்
தேவிமீனாட்சி யம்பிகையே. (1)

படைத்தளித்தழிக்கு மருமறைமுடிவின்
பக்கமே பராபரப்பொருளே
பைம்பொனே மணியே யின்பமே யணியே
பாரெலாமுதவிய தாயே
கடைக்கணினருளா லைந்தொழில்நடத்துங்
கன்னியே கருணைமாக்கடலே
கஞ்சமாமலரோ னமரர்மாமுனிவர்
கருதியே தொழ வளர்சுடரே
சடைக்கணிமதியந் தரித்தசங்கரியே
சயிலமன்னவன் றருமயிலே
தண்ணறவொழுகு நறுமலர்ப்புதிய
தாமரைத்தாளிணை தருவாய்
திடத்தொடுநாளுஞ் சுந்தரேசுவரரைச்
சேர்ந்தெழில் சார்ந்ததெள்ளமுதே
ஸ்திரந்தரும்ராய புரந்தனில்வாழுந்
தேவிமீனாட்சியம்பிகையே. (2)

அண்டகோடிகளை வெண்மணற்சோறு
யடுவிளையாடு மின்னரசே
அளவிலாவெளியைச் சிற்றிலாக்கொண்டு
மகமகிழ்ந்திடு மிளங்கனியே
கெண்டையங்கருணைக் கயற்கணதருளாற்
கேசவனயன் முதலோர்கள்
கிளைத்திடநோக்குங் கிருபைவாருதியே
சிற்றிளமதியணி பதியே

கண்டவர்பவநோய் கலங்கிடவகற்றிக்
    கனிவுறச்செயு மருமருந்தே
கடவுளர்முனிவோ ரெண்டிசைப்பாலர்
    கனிவொடுதுதிசெயு மறையே
தெண்டிரைப்புவிசொற் சுந்தரேசுவரரைச்
    சேர்ந்தெழில் சார்ந்ததெள்ளமுதே
ஸ்திரந்தரும்ராய புரந்தனில்வாழுந்
    தேவிமீனாட்சியம்பிகையே. (3)

அவனியுள்ளவர்செய் தவமகிமையினு
    வன்னைநின் திருவிளையாட்டை
யாருமேகண்டுநீர் பெறத்தமிழ் நாடதின்
    மலையத்வசன் மகளாய்
நவவடிவாகி யவதரித்தரசர்
    நாடியேதேடியே வணங்க
நவிலுமாமகரக் கொடியையெண்டிசையு
    நாட்டியே பேட்டிமையான
உவணமாலயனு மஞ்சவேநந்தி
    யோடுயர்கணங்களைவென்று
ஒங்கியவரனை யழைத்துமாமணஞ்செய்
    துயர்துரைத்தனஞ்செயு முமையே
சிவபரன்சோம சுந்தரேச்வரரைச்
    சேர்ந்தெழில் சார்ந்ததெள்ளமுதே
ஸ்திரந்தரும்ராய புரந்தனில்வாழுந்
    தேவிமீனாட்சியம்பிகையே. (4)

நீலமைக்குழலும் வெண்பிறைநுதலும்
 வித்திலமுருவலும் பவள
விறமுளவிதழும் வள்ளையஞ்செவியை
 நெருக்கியின் றிணைந்தமைக்கண்ணும்
ஞாலமேபுகழுங் குமுழிநுசிகையு
 நற்கணுடியையிணை கனமும்
நத்தெனுங்கழுத்தும் வேயுறுபுயமு
 நளினமாமலர்க் கரத்தழகுங்
கோலமாமலைபோற் சிறந்திணை தனமுங்
 கூறுமொட்டியாணப் பட்டுடையுங்
குலவுபொற் சிலம்பார் பதமும்பார்த்தென்கண்
 குளிர்ந்திடத் தரிசனந்தருவாய்
சீலமாஞ்சோம சுந்தரேச்வரரைச்
 சேர்ந்தெழில் சார்ந்ததெள்ளமுதே
ஸ்திரந்தரும்ராய புரந்தனில்வாழுந்
 தேவிமீனாட்சியம்பிகையே. (5)

இறைவரைச்சேர்ந்து முலகெலாமீன்று
 மிளமைநீங்காத கன்னிகையே
யிவ்வுலகினிலே யாறிரண்டறமு
 மென்றுமே வளர்த்திடுந்தாயே
மறைமுறைவழுவா நெறிசெயுமிமையோர்
 மாதவர் துதிக்கு மற்புதமே
வாரணமுகனைக் கந்தனையீன்று
 வையகங்காக்கு மாதவியே

குறைதவிர்த்தெந்த வுயிருக்குமுயிராங்
கோமளமே மலர்க்கொடியே
கொடியவஞ்ஞான விருளறவிளக்குங்
கோடிசூர்யோதய வடிவே
திறமருள்சோம சுந்தரேச்வரரைச்
சேர்ந்தெழில் சார்ந்ததெள்ளமுதே
ஸ்திரந்தரும்ராய புரந்தனில்வாழுந்
தேவிமீனாட்சியம்பிகையே. (6)

தொடுகரச்சிலையுந் தொடப்பொருமலருஞ்
சுருப்புநாணொடு தென்றற்றேருந்
துற்பலமடவார் சேனையுமுடைய
சொற்பனப்பொருளெனு மனங்கன்
விடுகணையைந்தான் மான்முதலானோர்
மெல்லியற்காளதாய் மயங்க
வேயுலகனைத்தும் வெற்றிகொள்வதுநின்
விழியருட்பார்வையாற் சிறிது
படுவலியென்றே நெடுமறைபுகழும்
பலபலவினோதமா மாயப்
படிவமையுனது பெருமையையுரைக்கப்
பாரினிலெவருக்கு மெளிதோ
திடமருள்சோம சுந்தரேச்வரரைச்
சேர்ந்தெழில் சார்ந்ததெள்ளமுதே
ஸ்திரந்தரும்ராய புரந்தனில்வாழுந்
தேவிமீனாட்சியம்பிகையே. (7)

சங்கரி கருணாகரி சர்வசிவ தயாபரி
சாம்பவி யேகாட்
சரியனவரத அந்தவாவிமலி
சத்சனசேகரி சுமுகி
திங்களஞ்சடைச்சி செந்துகிலுடைச்சி
சிந்துரவிளம்பிடி நடைர்சி
சிறுகொடியிடைச்சி யருள்விழிக்கடைச்சி
திரிபுரமெரிசெய்த திடச்சி
பங்கயவிழிச்சி யிங்கிதமொழிச்சி
பார்வதியெழிற் சிவகாமி
பராபரிதிருமால் சகோதரியண்ட
பகிரண்டநாயகி சவுரி
செங்கனிவாய்ச்சி சுந்தரேசுவரரைச்
சேர்ந்தெழில் சார்ந்ததெள்ளமுதே
ஸ்திரந்தரும்ராய புரந்தனில்வாழுந்
தேவிமீனாட்சியம்பிகையே.

அன்னையேகொடிய பவக்கனல்வாய
வங்கமெலாமிக நொந்தேன்
அடைக்கலமுனது கதியலால்வேறொன்
றுதரவுளதென வறியேன்
என்னையேயஞ்ச லஞ்சலென்றருள்வா
யினியிதுசகித்திலே னேழை
யிரங்கம்மாபரனு ருண்டைவிடத்தை
யின்னமுதாக்கிய பரையே

யுன்னையேகண்டேன் வணங்கினேன்றுதிக
ளோதினே னுருகினே னினிமே
லொருவரைக்கருதே னுனக்கிதோபார
முருதியா யாதரியம்மா
சென்னியினதியார் சுந்தரேசுவரரைச்
சேர்ந்தெழில் சார்ந்ததெள்ளமுதே
ஸ்திரந்தரும்ராய புரந்தனில்வாழுந்
தேவிமீனாட்சியம்பிகையே. (9)

இனியுடலெடுத்துப் பாதகனல்கி
னிமைப்பொழுதாயினும் வாழ்க
வெண்ணிலேனெண்ணி லேனுனதிருதா
ளிணையறிந்திடச் சொனேனம்மா
பணியைநம்பியுமேர்ப் பூட்டுவார்போலப்
பாவியாமாதரை நம்பிப்
பற்பலசன்ம கோடிநாட்கழித்துப்
பட்டதெல்லாமினிப் போதும்
மனிதர்மெய்யிதிலே யின்றுயிப்பொழுதே
மகிழ்ந்திடமுத்தி தந்திடுவாய்
மற்றினிநாளை யெனிலதுகேளேன்
வந்துபே ரின்பவாழ்வருள்வாய்
தினமுமேமகிழ்ந்து சுந்தரேச்வரரைச்
சேர்ந்தெழில் சார்ந்ததெள்ளமுதே
ஸ்திரந்தரும்ராய புரந்தனில்வாழுந்
தேவிமீனாட்சியம்பிகையே. (10)

உ

கணபதி துணை.

இராயபுரம்.

சுப்பிரமணியசுவாமி பேரில்

# ஸ்தோத்திரப்பதிக விருத்தம்.

இஃது

புதுக்கோட்டை சமஸ்தானம்

திருமெய்யம் தாலூகா ராஜமாணிக்கநல்லூருக்கு

பிரதிநாமமான

இராயபுரத்திலிருக்கும் மழவைத் திருவிளையாடல்

மகா-ா-ா-ஸ்ரீ

சுப்பிரமணிய பாரதிகளவர்கள் குமாரர்

இராமஸ்வாமி அய்யரவர்களால்

இயற்றப்பட்டது.

உ

சிவமயம்.

## சுப்பிரமணியர் பேரில்

# ஸ்தோத்திரப் பதிகவிருத்தம்.

சீர்கொண்டகருணையமு தோராறெனப்பொழிந்
திடுவிழிக ளீராறுடுந்
திங்களினுமிஞ்சிநிறை யிங்கிதமிலங்கிவளர்
செந்திருமுகங்க ளாறுந்
தார்கொண்டவடிவேன் முதற்குலவுபடைகளைத்
தாங்குமுன் னான்குகரமுஞ்
சரப்பணிகள்சேருரமு நவரத்னகிரீடந்
தரித்தொளிர்ந் தோங்குசிரமும்
வார்கொண்டதனவல்லி தெய்வானையிருபுறமும்
வானவர்கள் கானசுரமும்
மனமகிழ்ந்தருள்வரமு மயின்மீதுவருதரமு
மறவாதிருக்க வருள்வாய்
போர்கொண்டசூரனை வதைத்தபுயதீரனே
பூபர்தொழு வயவீரனே
புரவலர்கள்புகழ்வாச மரையின்மகள்வளர்ராஜ
புரமருவுமுருகேசனே. (1)

பாரிலொருவாவிதனி லேமருவுபேரரசு
பாசிலைகள் நீரின்விழவே
பாவுகயலாமொழிய நீள்கரையின்வீழினது
பாய்பரவையா கிதமுமே
சேரினொருநாள்கரையி னீரிலொருபாதியொடு
சேல்பரவையா யிலையவே

தேவவழிபாடுபுரி கீரன்மனமாறமிகு
  தீதுவினை பூதமுடனே
வாரிமலைமேவுமுழை சேரமனம்வாடிமுகின்
  மாரியெனவே யுனதுமேன்
மாமதுரமானகவி கூறமகிழ்வாகியவன்
  வாதனைகள் தூளிபடவே
போரிலகுவேலினொடு மேமயிலின்மீதுவரு
  போதகுருவே யருளுவாய்
புரவலர்கள்புகழ்வாச மறையின்மகள்வளர்ராஜ
  புரமருவுமுருகேசனே. (2)
கலைகள்யாதொன்றினுங் கல்லாதுமனதினொரு
  கணமேனு முனதுகஞ்சக்
கழலிணைகள்புல்லாதுன் னாமமுஞ்சொல்லாது
  கனிவுடன் பணியுமடியார்
நிலைகளெங்கேயென்று செல்லாதுமஞ்ஞான
  வினைவையுங் கொல்லாதுநன்
னெறிகளினுநில்லாது பொறிகளையும்வெல்லாது
  நெடுநாட்கழித்து முலகின்
றலையெய்துபொல்லாது செய்திடுங்கொடியனுன்
  றனையுமல்லாது காணேன்
றயைபுரிந்தனுகூல வரமுவந்தருள்சீல
  சரசரஞ்சித லோலனே
புலவுகமழ்வேலளே சகமகிழ்குணாலனே
  புரதகனர் தருபாலனே
புரவலர்கள்புகழ்வாச மறையின்மகள்வளர்ராஜ
  புரமருவுமுருகேசனே. (3)
மங்குலைவிழிங்கியெழில் கொண்டசிறுசெஞ்சுடர்
  வயங்குவதையங் கனியதாய்

வந்துணவிறந்திடு பதங்கமெனவிந்துமுக
மங்கையர்கள் செங்கனியைநேர்

தங்குமதரங்களை யருந்திமிகுவின்பவமு
தந்தனையிணைந்த தெனவே

சங்கையறமிஞ்சுமய லும்புரியுமங்கவர்க
டஞ்சமென நம்பியலையா

தெங்குநிறைகின்றவுன தந்தவுருவந்தனையி
தென்றுணரவந் தருளியே

விந்தசனனந்தொலையு முந்தவினையுந்தவிர
வெஞ்சலில்வரந் தருகுவாய்

பொங்குமதுரம்பெருகு செந்தமிழலங்கலணி
புந்தியினுகந்த குகனே

புரவலர்கள்புகழ்வாச மரையின்மகள்வளர்ராஜ
புரமருவுமுருகேசனே. (4)

வாதுசெய்திடுதீர ராஞ்சமணர்கழுவேற
மானிலமுவந்து கூற

வளர்சைவமீடேற வுனதன்பர்மனமீற
வழுவா தறங்கடேற

வோதுதுன்மார்க்கங்க ளாம்வேறுமதமாற
வுலகின்மிகு மகிமையேற

வொளிருமெஞ்ஞானவடி வாய்வந்துவிளையாடு
முனதுபா தாரவிந்தப்

போதுதந்தாளாது காதினுங்கேளாது
போலிருப்பது தர்மமோ

பூணுமுனதன்பிலா தவனென்றுவர்ம்மமோ
புகலுவாய் ஜகதீசனே

பூதித்திடுநேச மாதவத்தவர்பேசு
போததத்துவ வாசனே

புரவலர்கள்புகழ்வாச மறையின்மகள்வளர்ராஜ
புரமருவுமுருகேசனே. (5)

வடவைமண்டழல்சேரு மூவரியுண்டுயர்வானம்
வரையிலங்கிய மேருவாய்

வளர்சுரும்பிசைபாட மதுவெழுந்ததிவாச
மருவுசந்தன மானகா

தடவிவெந்துயராழி முழுகுகங்கணமாதர்
தனிவருந்திடு மாவியாங்

தகைமைகொண்டிடுமூனை நிதமுமூண்டெழுமாரு
தமமமர்ந்திடு நாகமேற்

படரருந்தவமோன முனிதிருந்தியஞான
பதவியொன்றிட வோதியே

பரமசுந்தரநாத குருசுதந்தரமான
படிவுகொண்டிடு ஜோதியே

புடவிவந்தடியேனை யுடலினம்பிறவாத
புகழ்நிதம்பெற வாளுவாய்

புரவலர்கள்புகழ்வாச மறையின்மகள்வளர்ராஜ
புரமருவுமுருகேசனே. (6)

தசைநரம்பென்புதிர மென்றுதுர்க்கந்தங்கள்
சார்ந்தஜடமான வுடலைத்

தானெனநினைந்துமகிழ் வொடுபெயர்புனைந்துபல
ஜாதியா மெனவகுந்து

விசையுமுலகினின்முந்து சனனவாதையினொந்து
மெமனுமிக வேமுனிந்து

விடறுசெய்திடநைந்து வுருகுமென்மனம்வந்து
விருசரணுகந் தருளுவாய்
திசைகிடுகிடெனவதிர வுரகன்மணிமுடியுதிர
ஜகமதனி லடியர்முதிர

ஜெயஜெயாவெனமுழங் கிடமயிலின்மீதுவரு
சித்ரநடனு மிர்துதளாம்
புஜைமருவுமான்மருக னேயமரர்கலிதீர்த்த
புங்கவேற் கையமெய்யா
புரவலர்கள்புகழ்வாச மறையின்மகள்வளர்ராஜ
புரமருவுமுருகேசனே. (7)

அனலைமென்றிடுகோபம் நமனைமிஞ்சியரூப
மரியவஞ்சக மாயரா
மசுரர்கெஞ்சிடவால விடமதுண்டொளிசேரு
மதிசவுந்தர வேலினற்
சினமிகுந்திடமோதி யுடல்பிளந்தவராவி
சிதறிவிண் ணவர்வாழவே
செறியுமைந்தருநாடு முடியணிந்திசைவாழ்வு
திகழுமிந்திர னுளவே
மனதுவந்தவர்தானை யதிபனென்றிடவாகி
வளருகுஞ்சரி மாதையே
வதுவைகொண்டுயர்வான வதிதுரந்தரநாத
மயிலிலங்கிய வேலனே
புனலுகுந்திடஞான விழியினென்றுனதாசை
புரியநின்றெனை யாளுவாய்
புரவலர்கள்புகழ்வாச மறையின்மகள்வளர்ராஜ
புரமருவுமுருகேசனே. (8)

விண்டலமிலங்குமுடி சேர்பரங்குன்றுமலை
வீசுசெந்தூர் துதித்தே
வினவுதிருவாவினன் குடியேரகங்குன்ற
மெங்கும்விளை யாடலோடுங்
கொண்டறவழ்சோலைமலை யென்றுபுகழாறுபடை
குலவுவீ டதனினுளுங்

கோதிலாதடியர்தொழ வேமகிமையோடுமகிழ்
　கொண்டுவிளையாடு முருகே

ரண்டர்தொழுமுருவேத்ரி புவனநவதருவேநின்
　னடியரகமேவு திருவே

வபேதசர்வாதார குணரகிதவானந்த
　வருளுருவமான குருவே

புண்டரிகமலர்மேவு போதனைக்கொடியசிறை
　புக்கிடச்செய் புனிதனே

புரவலர்கள்புகழ்வாச மறையின்மகள்வளர்ராஜ
　புரமருவுமுருகேசனே. (9)

இத்தரையினெத்தனை விதப்பிறவிபெற்றுமன
　மெய்த்துமயலுற் றலகுவே

னித்தருணமெய்க்கருணை வைத்துவனஜத்தல
　ரிணைப்பதமெனக் கருளுவாய்

உத்தரைவயிற்றின்வரு கற்பமதனுட்புக
　வுறுத்துவி டழற்கணை கள்போ

யுற்றதைவருத்திட மிகத்தவி னத்தவ
　ளுளத்தினி னினைத்துருகியே

பத்தரையளித்திடு மலர்க்கணவெனத்துதி
　ப திடவதற் கருளியாள்

பச்சைமுகிலுங்கிணை எறத்தவரி.வித்யமிகு
　பக்கமடுமெய்க்கு மருகா

புத்தரையறக்கழுவி [illegible] தவ [illegible] துடு
　புரத்தையும [illegible] குமன

புரவலர்கள் [illegible] வா மறையின்மகள்வளர்ராஜ
　புரமருவு [illegible] (10)

[illegible stamp]

Q23:417
N06

